**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 279/2016 |
| நாள் | 23.07.2025 |
| வா.சா.4 | சுப்ரமணி |
| வயது | 60 |
| ஊர் | மருதம்பட்டி காலனி |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**2 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கறிக்கடை வைத்துள்ளேன். இவ்வழககில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருநது எனக்கு அழைபபாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான்.வா.சா.1 அன்னலெட்சுமி அழைத்ததின் பேரில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த போது வேறு சொத்து ஆவணங்களில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எந்த மாதிரியான ஆவணங்களில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் கிரய ஆவணம், செட்டில்மெண்ட் ஆகிய ஆவணங்களில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். நான் நிலம் இடைத்தரகராக வேலை பார்த்து வருவதால் ஆவணங்களில் சாட்சி கையொப்பம் செய்தேன். கிரய ஆவணம், செட்டில்மெண்ட், உயில் ஆவணம் ஆகிய ஆவணங்கள் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுப்பார்களா என்றால் சரிதான். உயில் ஆவணம் முதலில் வெள்ளை தாளில் எழுதி அதன் பின்னிட்டு, பச்சைத் தாளில் எழுதினார். முத்திரை தாளில் எழுதி சார் பதிவாளர் அலுவலகத்தில் உயில் ஆவணம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். உயில் ஆவணத்தை நான் தனிப்பட்ட முறையில் படிக்கவில்லை. அவர் படித்து காண்பித்தார். உயில் ஆவணத்தை பதிவு செய்ய வேண்டும் என்றும் நான்

அறிவுறுத்தவில்லை என்றால் சரிதான். உயில் ஆவணம் எழுதப்பட்ட தேதியை நியாபகம் வைத்து எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டேன். 9 வருடத்திற்கு முன்பாக நான் கையொப்பம் செய்த கிரய ஆவணம், தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் தேதி என்னால் குறிப்பிட்டு கூறமுடியுமா என்றால் கூறமுடியாது. வா.சா.1 அன்னலெடசுமி குறிப்பிட்டதை தான் நான் நிருபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1வது வாதி சிதம்பரம் இறந்தது பின்னிட்டு நானும், வா.சா.1 முதல் 3 சாட்சிகளும், 3,4 வாதிகளும் கூட்டாக சேர்ந்து மோசடியாக வா.த.சா.ஆ.12 உயில் ஆவணத்தை மோசடியாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல. வா.சா.1 அன்னலெட்சுமி எனது மனைவியின் அக்கா மகள் ஆவார். வா.சா.1 அன்னலெட்சுமி என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், என் தரப்பு சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.12 உயில் ஆவணத்தில் உள்ள சொத்து விவரத்தை இந்த வழக்கின் வழக்குரையை பார்த்து எழுதினார்.

<u>**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**</u>

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.